செய்தி வெளியீடு : 09 நாள் :04.04.2018

***தேனி மாவட்டம்***
***களிமண், வண்டல், சவுடு மற்றும் கிராவல் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

*****

தேனி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நாள்: 05.05.2017ன்படி தேனி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குளம், கண்மாய், வாய்க்கால் மற்றும் நீர்த்தேக்க படுகைகளில் விவசாயிகள், மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் தனிநபர்கள் களிமண், வண்டல், சவுடு மற்றும் கிராவல் ஆகியவைகளை இலவசமாக எடுத்துக் கொள்ள தகுதியான 412 நீர்நிலை அமைப்புகளின் பட்டியல் மற்றும் மனு செய்வதற்கான நிபந்தனைகள் வெளியிடப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் அரசிதழ் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. தங்களது நிலத்தை வளப்படுத்த வண்டல் மண் தேவைப்படும் விவசாயிகள், மண்பாண்டங்கள் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு (Domestic Purpose)மண் தேவைப்படும் தனிநபர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று பட்டியலில் இடம் பெற்றுள்ள தங்களுக்கு அருகாமையில் உள்ள நீர்நிலைகளில் இருந்து களிமண், வண்டல், சவுடு மற்றும் கிராவல் எடுக்க நிபந்தனைகளுக்குட்பட்டு வட்டாட்சியரிடம் மனு செய்து அனுமதி பெற்று பயன் பெறலாம் எனவும், ஜூன் மாதத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக விவசாயிகள் வண்டல் எடுப்பதன் மூலம் தாங்கள் பயன்பெறுவதோடு நீர்நிலைகளின் கொள்ளளவு அதிகரிப்பதற்கும் வாய்ப்புள்ளதால் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**